

# அரசியல் புரிதல் கொண்ட கொள்கைக் கூட்டமாகத் திகழ வேண்டும்!

# திராவிட இயக்கக் கொள்கைகள் - அரசியல் சாதனைகள் பற்றி இளைஞர்களிடம் விரிவாக எடுத்துக் கூறுங்கள்!

## இளைஞர் அணி புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 16 -**

**சென்னை, தென்மேற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட மயிலாப்பூர், தியாகராயர் நகர் மற்றும் சென்னை வடகிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட திருவொற்றியூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி வட்ட பாக நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு புதிய நிர்வாகிகளை வாழ்த்திப் பேசினார். அப்போது அவர் ``கூச்சல் எழுப்பும் கூட்டமாக இல்லாமல், அரசியல் புரிதல் கொண்ட கொள்கைக் கூட்டமாக இளைஞர்கள் திகழ வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

மயிலாப்பூர், தியாகராய நகர், திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணி வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் இந்த மாலை நேரத்தில் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இன்று ஞாயிற்றுக்கிழமை. இன்று இரவு 8 மணிக்கு கிரிக்கெட் போட்டி இருக்கிறது என்று நினைக்கிறேன். அதனால், அதிக நேரம் பேசப் போவதில்லை. பேசுவதைவிட செயலில் காட்ட வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

### இளைஞர் அணி செயல் வேகம்

இந்தப் பொறுப்புகளின் மூலம் இளைஞர் அணிக்கு வந்திருக்கிற, உங்கள் அத்தனை பேரையும், வருக, வருக என வரவேற்கிறேன். உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு காலையில்தான் முரசொலியில் உங்களின் பெயர்கள் அச்சிடப்பட்டு வந்தன. காலையில் அறிவிப்பு வந்து, மாலையில் அறிமுகக் கூட்டத்தை நடத்தி விட்டோம். இளைஞர் அணி எவ்வளவு வேகமாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

உங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது. ஏனென்றால், நீங்கள், என்னைப் பார்க்க வந்த கூட்டம் இல்லை, நான் என்ன பேசப்போகிறேன் என்பதைக் கேட்க வந்த கூட்டம். கொள்கைக் கூட்டம். பலமுறை நான் சொல்லி இருக்கிறேன். எத்தனையோ பொறுப்புகள் வந்தாலும், சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத் துறை அமைச்சர், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர், அதன் பிறகு இப்போது துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகளுக்கு வந்தாலும் என்னுடைய மனதுக்கு மிகுந்த நெகிழ்ச்சியைத் தருகின்ற நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற இந்த பொறுப்பு மட்டும்தான்.

### ஒற்றை நம்பிக்கை நீங்கள்தான்

2019ஆம் ஆண்டு இந்தப் பொறுப்பை ஏற்கும் போது, மிகப்பெரிய பயம் இருந்தது. மிகப் பெரிய பொறுப்பு, தலைவர் அவர்கள் ஆரம்பித்த அணி இது. 45 ஆண்டுகால உழைப்பு. தலைவர் அவர்கள் இந்த இளைஞர் அணியை, 45 வருடம் ஒரு ராணுவ கட்டுப்பாட்டோடு நடத்திய ஒரு அணி இந்த இளைஞர் அணி.

அப்போது இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டேன். அப்போது பத்திரிகை நண்பர்கள் எல்லாம் என்னைப் பேட்டி எடுத்தார்கள். அப்போது நான் சொன்னேன். இந்தப் பொறுப்பை எடுத்திருக்கிறேன். விமர்சனங்கள் வந்தன. நான் சொன்னேன், எல்லோரும் கண்டிப்பாக விமர்சனம் செய்வார்கள். ஆனால், என்னை நான் நிரூபிக்க வேண்டியது ஒரேயொரு விஷயத்தில் மட்டும்தான். களத்தில் இறங்கி வேலை செய்வேன். வருடம் முழுவதும் வேலை செய்வேன். எப்போதுமே கழக நிர்வாகிகளுடன் குறிப்பாக இளைஞர் அணி தம்பிமார்களுடன், மக்களுடன் நெருக்கமாக இருப்பேன். அவர்கள் சொல்வதை என்னுடைய காது கொடுத்து கேட்பேன். அவர்களுக்கு என்ன பிரச்சினையோ, அதை தீர்ப்பதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவேன், என்று சொன்னேன் என்றால், அது இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் மேல் இருக்கக்கூடிய அந்த ஒரே நம்பிக்கையில்தான். என்னுடைய ஒற்றை நம்பிக்கை நீங்கள்தான்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வேன். இந்த ஏழு ஆண்டுகளாக 2018 ஆம் ஆண்டு, நான் பொது வாழ்க்கைக்கு வந்து, தீவிர பணிகள், கழகப்பணிகள் இளைஞர் அணி பணிகளில் ஈடுபட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். கழக நிகழ்ச்சிகள், திருமண விழாக்கள், கட்சி நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், இந்த இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களையெல்லாம் சந்திக்கும் போதுதான் குடும்ப விழாவில் சந்தித்து என் சொந்த தம்பிகளையும், அண்ணன்களையும், என் சொந்த சகோதரர்களையும் பார்க்கிற, மனதிற்கு நெருக்கமான உணர்வு எனக்கு இருக்கிறது.

### இளைஞர் அணி வரலாறு

இவ்வளவு பெருமை ஏனென்றால், நம்முடைய இளைஞர் அணிக்கு அந்த அளவுக்கு பெருமை இருக்கிறது. இன்றைக்கு எத்தனையோ இயக்கங்களில் இளைஞர் அணி ஆரம்பிக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு இயக்கத்திற்கு இளைஞர் அணி ஆரம்பித்தது யார் என்று கேட்டீர்கள் என்றால், நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதை ஆரம்பித்தது நம்முடைய கழகத் தலைவர் அவர்கள்தான். நம் இளைஞர் அணியின் வரலாற்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 1980 ஆம் ஆண்டு மதுரை, ஜான்சிராணி பூங்காவில் கலைஞர் அவர்களும், நம்முடைய இனமான பேராசிரியர் தாத்தா அவர்களும்தான் இந்த இளைஞர் அணியை வாழ்த்தி ஆரம்பித்தார்கள். 45 வருடங்களைத் தாண்டி இன்றைக்கும் இளைஞர் அணி களத்தில் முன்வரிசையில் இருக்கிறது என்றால், அதற்கு வந்திருக்கக்கூடிய உங்களின் உழைப்புதான் காரணம்.

### பெருமை வாய்ந்த அணி

நம் இயக்கத்தில் 25 அணிகள் இருக்கின்றன. கலைஞர் அவர்களால் பலமுறை பாராட்டப்பட்ட அணி நம் இளைஞர் அணி. இயக்கத்தில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், அதில் முதன்மையான அணி என்றால் அது இளைஞர் அணிதான் என்று கலைஞர் அவர்களால் தொடர்ந்து பலமுறை பாராட்டை பெற்றது நம் இளைஞர் அணி. அப்படிப்பட்ட ஒரு பெருமை வாய்ந்த அணிக்கு நீங்கள் எல்லாம் இன்றைக்கு வந்திருக்கிறீர்கள்.

இளைஞர் அணியில் இருப்பது நமக்குப் பெருமை. இளைஞர் அணிக்கும் பெருமை. வந்திருக்கக்கூடிய நிர்வாகிகள் நீங்கள் அத்தனை பேரும் கெத்தா, கம்பீரமாக, தைரியமாக உங்களின் காலரை தூக்கி விட்டுட்டு பெருமையாகச் சொல்லலாம். நான் யாரோ ஒருவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே இந்த பொறுப்புக்கு வரவில்லை. என்னுடைய உழைப்பு ஒரு காரணம். நான் பல வருடங்களாக இளைஞர் அணிக்கு உழைத்திருக்கிறேன். கட்சிக்காக உழைத்திருக்கிறேன். முழுக்க முழுக்க உங்களின் பணிகள் மூலமாகத்தான் நீங்கள் இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

### பல கட்டங்களை, பல தேர்வுகள்

உங்களை இந்தப் பொறுப்புக்கு நியமிப்பதற்கு முன்பு மாவட்ட, பகுதி, வட்டக் கழக செயலாளரிடமிருந்து பரிந்துரைகளை எல்லாம் வாங்கினோம். ஆனால், அவற்றை அப்படியே அப்படியே அறிவிப்பாக நாங்கள் வெளியிடவில்லை. இதற்காக அன்பகத்தில் தனியா ஒரு குழு அமைத்து, அவர்கள் உங்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் உங்களை அலைபேசியின் வாயிலாக தொடர்புகொண்டு, உங்களை சரிபார்த்து, நீங்கள் இந்த பொறுப்பில் பணியாற்றுவதற்கு எவ்வளவு ஈடுபாடோடு இருக்கிறீர்கள். கழக கொள்கைகளை எந்த அளவுக்கு தெரிந்திருக்கிறீர்கள். சமூக வலைதளத்தில் எந்த அளவுக்குச் செயல்படுகிறீர்கள். இதையெல்லாம் கேட்டு தெரிந்து கொண்டோம். இப்படி பல கட்டங்களை, பல தேர்வுகளில் வெற்றிப் பெற்று இன்றைக்கு நீங்கள் இந்த பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். அதனாலதான் சொன்னேன், நீங்கள் கெத்தா, கம்பீரமாக உங்கள்ளுடைய காலரை தூக்கி விட்டுக்கொண்டு நான் தி.மு.க இளைஞர் அணியில் நிர்வாகியாக இருக்கேன் என்று சொல்லலாம்.

### சிறப்பாக உழையுங்கள்

இன்றைக்கு பல கட்சிகள், பல இயக்கங்கள் பூத் கமிட்டி போடுவதற்கே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆள் கிடைக்காமல் மிஸ்டு கால் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நியமித்துக்கொண்டு இருக்கிற ஒரே இயக்கம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள வேண்டும். இளைஞர் அணியில் நீங்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக உழைத்தீர்கள் என்றால், சரியான நேரத்தில் உங்கள்ளுக்கான அந்த அங்கீகாரத்தை நம்முடைய தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார். அதற்கு இங்கு இருக்கக்கூடிய இந்த மேடையே ஒரு மிகச்சிறந்த மிகச்சிறந்த உதாரணம்.

### தோளோடு தோள் நிற்கிறார்

இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர், உங்களின் மண்டல பொறுப்பாளர் சகோதரர் ஜோயல் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். அவர் தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருக்கிறதும்பொழுது, இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளராக இருந்து, அதன் பிறகு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக பொறுப்பேற்று, தலைவர் அவர்களுக்கு தோளோடு தோள் நின்று, பக்கபலமாக இருந்தவர்தான் சகோதரர் ஜோயல் அவர்கள். இன்றைக்கு என்னுடன் தோளோடு தோள் நிற்கிறார். கொடுக்கப்பட்ட அனைத்து பணிகளையும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார். குறிப்பாக, இந்த சென்னை மண்டலத்தில் எந்த நிகழ்ச்சினாலும் அதை பொறுப்பேற்றுக்கொண்டு அதை சிறப்பாக நடத்தக்கூடியவர் ஜோயல் அவர்கள்.

தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஜெ.கருணாநிதி அவர்களும் இங்கு இருக்கிறார். அவரும் நேராக பகுதி செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக ஆகவில்லை. அவரும் இளைஞர் அணியின் கண்டுபிடிப்புதான். இளைஞர் அணியில் பகுதி அமைப்பாளராக 18 வருடம்,



18 வருடமா என்று பார்க்காதீர்கள். 18 வருடம் களத்தில் இறங்கி உழைத்ததால்தான், இன்றைக்கு அவர் சட்டமன்ற உறுப்பினராக, பகுதி செயலாளராக மிகப்பெரிய பொறுப்பில் இருக்கிறார்.

### செயல்பட்டால் உயர்வு உறுதி

வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார் இங்கு இருக்கிறார். இளைஞர் அணியில் திருவொற்றியூர் பகுதி அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு மாவட்ட அமைப்பாளராக தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளார். சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் சகோதரர் உமாமகேஷ்வர் இங்கு வந்திருக்கிறார். இரண்டு முறை பகுதி அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டதால் இப்போது, தலைவர் அவர்களால் மாவட்ட துணை அமைப்பாளராக உயர்த்தப்பட்டுள்ளார்.

தம்பி அஸ்வின் வந்திருக்கிறார். அவரும் இளைஞர் அணியில் பகுதி துணை அமைப்பாளராக செயல்பட்டு, இன்றைக்கு மாவட்ட துணை அமைப்பாளராக உயர்த்தப்பட்டுள்ளார். இதுமாதிரி பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் தம்பி தினேஷ் மற்றும் விக்னேஷ் இரண்டு பேரும் பகுதி துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டதினால், இன்றைக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக பொறுப்பேற்று, சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

வடகிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர் மணிவண்ணன் அவர்கள். இளைஞர் அணியில் பகுதி அமைப்பாளராக இருந்து இன்றைக்கு மாவட்ட துணை அமைப்பாளராக உயர்ந்திருக்கிறார். தம்பி கேபிள் கணேசன் அவர்கள் இளைஞர் அணியில் பகுதி துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டவர். இன்றைக்கு மாவட்ட துணை அமைப்பாளராக தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளார்.

இப்படி இந்த மாவட்டத்தில் மட்டும் கிடையாது. தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், வணக்கத்திற்குரிய மேயர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் என இப்படி பல பேர் இளைஞர் அணியிலிருந்து வந்தவர்கள்தான்.

### உங்களுக்கான பயிற்சிக் களம்

ஒரு முக்கியமான கிரிக்கெட் ஆடப்போகிறோம் என்றால், உடனே கிரிக்கெட் சிறப்பாக ஆட முடியாது. நேரடியாக தேர்வு செய்யமாட்டார்கள். அதற்கு முன்பு பயிற்சி கொடுப்பார்கள். அதேபோல் பெரிய பெரிய பொறுப்புகளுக்கு வருவதற்கான பயிற்சிக் களம்தான் இளைஞர் அணி என்ற பொறுப்பு. அதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள் உங்கள் அத்தனை பேருக்கும் ஒரேயொரு வாக்குறுதி, உறுதிமொழி கொடுக்கிறேன். நீங்கள் உழைக்கத் தயாராக இருந்தீர்கள் என்றால், உங்களை உயர்த்த நம்முடைய தலைவர் அவர்கள் என்றைக்கும் தயங்கியது கிடையாது.

உங்கள் ஒவ்வொருவரின் கட்டுப்பாட்டிலும் 50, 60 பேரை கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், நீங்கள் சொல்கிறவர்களுக்கு அவர்கள் வாக்களிக்கிறார்கள், அந்த நிலைமையை உருவாக்கி வைத்திருந்தீர்கள் என்றால் உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது.

இன்றைக்கு இளைஞர் அணி சார்பாக களத்திலும், கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளை நாம் மேற்கொண்டு இருக்கிறோம். இதையெல்லாம் நீங்கள் உங்களுடன் இருக்கக்கூடிய உங்களின் உறவினர்கள், உங்களுடைய நண்பர்கள், உங்களுடன் வேலை பார்க்கிற சகோதரர்கள், அவர்களிடம் எல்லாம் நீங்கள் எடுத்துக்கொண்டு போய் சேர்க்க வேண்டும்.

இல்லந்தோறும் இளைஞர் அணி மூலம் வீடு வீடாக சென்று இளைஞர் அணி உறுப்பினர்களைச் சேர்த்தோம். `ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பை, தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட இரண்டு கோடி பேரை கழகத்தில் உறுப்பினராகச் சேர்த்திருக்கிறோம் என்றால், அதில் இளைஞர் அணியின் பங்கு மிகமிக முக்கியம், தவிர்க்க முடியாத பணி.

### கலைஞர் நூற்றாண்டு நூலகங்கள்

கலைஞரின் நூற்றாண்டான சென்ற வருடம், தலைவர் நமக்கு நிறைய பொறுப்புகள் கொடுத்தார். நிறைய பொறுப்புகள் கொடுத்தார். அதில் முக்கியமான பணி கலைஞர் நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து தொகுதிகளிலும் ஒரு தொகுதிக்கு ஒரு நூலகத்தை அமைக்க வேண்டும் என்றுச் சொன்னார். இந்தியாவில் எந்த இயக்கமாவது இப்படி நூலகத்தை அமைத்து மாணவர்கள் படிக்கவேண்டும், போட்டித் தேர்வுகளுக்கு தயாராக வேண்டும், பொது அறிவு வளர்த்துக்கொள்ள வேண்டும், அரசியல் அறிவு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று செயல்படுகிற இயக்கம் எங்கேயாவது இருக்கிறதா என்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணைச் செயலாளர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு 234 தொகுதிகளில் கிட்டத்தட்ட 100 தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை இளைஞர் அணி சார்பாக திறந்திருக்கிறோம்.

இளைஞர் அணி சார்பாக முத்தமிழறிஞர் பதிப்பகம் ஆரம்பித்து, கிட்டதட்ட நம்முடைய கொள்கைகளைப் பேசுகிற 25 புத்தகங்களை நம் இளைஞர் அணி இன்றைக்கு அச்சிட்டு வெளியிட்டு இருக்கிறது. தலைவர் இன்னொரு இலக்கு கொடுத்தார். கழக இளம்பேச்சாளர்கள் 100 பேரை தமிழ்நாடு முழுவதும் பேச்சு போட்டி நடத்தி கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை சிறப்பாக செய்து, மாநிலம் முழுவதும் பேச்சு போட்டி நடத்தி, இன்றைக்கு 200 பேச்சாளர்களைத் தலைமைக்கு ஒப்படைத்திருக்கிறோம். அந்த 200 இளம்பேச்சாளர்களும் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் சுற்றி சுற்றி நம்முடைய கழகக் கூட்டங்களில், இளைஞர் அணிக் கூட்டங்களில் சிறப்பாக பேசி வருகிறார்கள்.

தலைசிறந்த பத்திரிகையாளர்களை உருவாக்க வேண்டும் என்று கலைஞர் மாணவர் பத்திரிகையாளர் திட்டத்தை இளைஞர் அணி துவங்கி இருக்கிறது. இந்த பணிகளையெல்லாம் இப்போது இருக்கிற இளைஞர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். அவர்களை கொள்கைப்படுத்துங்கள், அவர்களிடம் அரசியல் பேசுங்கள். நம்மிடம் நம் திராவிட மாடல் அரசின் நான்கரை வருட சாதனைகள் இருக்கின்றன. திராவிட இயக்க கொள்கைகள் இருக்கின்றன.

### அரசின் சாதனைகள்

குறிப்பாக உங்களின் தியாகராய நகர், மயிலாப்பூர், திருவற்றியூர் தொகுதிகளுக்கு தலைவர் அவர்கள் என்னென்ன திட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உதாரணத்துக்கு சில திட்டங்கள் மட்டும் இங்கு சொல்ல விரும்புறேன். இன்றைக்கு மயிலாப்பூர் தொகுதியில் 5,000க்கும் அதிகமான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. எந்த ஆட்சியிலும் செய்யாத சாதனை இது. குடிசைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்று கலைஞர்தான் குடிசை மாற்று வாரியம் ஆரம்பித்தார்.

மீனவர்களுக்கு 10 கோடி ரூபாய் செலவில், லூப் ரோட்டில் மீன் அங்காடி திறக்கப்பட்டு, இன்றைக்கு பொதுமக்கள் அதை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். லூப் சாலையில 1 கோடி 50 லட்சம் ரூபாய் செலவில் கால்பந்து மைதானம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். நான்தான் அதை திறந்து வைத்தேன்.

நாகேஸ்வரா பூங்காவில் 1 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் இளைஞர்கள் பயன்படுத்துகிற மாதிரி ஒரு உடற்பயிற்சிக் கூடம் திறந்திருக்கிறோம்.

மயிலாப்பூரில் 15 கோடி ரூபாய் செலவில் இரண்டு புதிய சமூக நலக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மயிலாப்பூரில் 80 சதவிகித அளவிற்கு மழைநீர் வடிகால் பணிகள் இன்றைக்கு முடிவடைந்திருக்கின்றன.

தியாகராய நகர், உஸ்மான் சாலையில் புதிய மேம்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. 21,000 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் இன்றைக்கு முழுவதும் முடிக்கப்பட்டுள்ளன.

திருவொற்றியூர் தொகுதியில் எண்ணூர் நெட்டுக்குப்பம் கொசத்தலை ஆற்று முகத்துவாரத்தை கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய் செலவில் தூர்வாரி, ஆழப்படுத்தி தூண்டில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது. எண்ணூர் கொசஸ்த்தலை ஆறு தூர்வாரும் பணி 30 கோடி ரூபாய் செலவுக்கு நம்முடைய தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி அந்த பணிகள் நடந்திருக்கின்றன.

நெட்டுக்குப்பம் மீன்பிடி இறங்குதளம் 11 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், கடற்கரை வலைப்பின்னும் கூடம், மீன் காய வைக்கின்ற கூடம், கழிவறை போன்றவை கிட்டத்தட்ட 8 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ளது. கத்திவாக்கம் பேருந்து நிலையம், நவீன மீன் மார்க்கெட், நூலகம் இதெல்லாம் 14 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்து கொண்டு மக்களிடம், இளைஞர்களிடம் இந்த பணிகளை கொண்டு போய் சேர்க்க வேண்டும். அந்தப் பணிகளை நீங்களும் மேற்கொள்ள வேண்டும். எந்த பணியை செய்தாலும் அதை மாவட்ட, பகுதி, வட்ட, செயலாளர்களிடம், உங்களின் மண்டல பொறுப்பாளரிடம், மாவட்ட அமைப்பாளரிடம் சொல்லிட்டு, ஆலோசித்துவிட்டு, அவர்களின் அனுமதி வாங்கிவிட்டு அதைச் செய்யுங்கள்.

இங்கு வட்ட செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்னுடைய அன்பு வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். இங்கு வந்திருக்கக்கூடிய புதிய இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் அரசியலுக்கு, பொது வாழ்க்கைக்கு, கழகப் பணிக்கு, இளைஞர் அணி பணிக்கு புதிதாக வந்திருப்பார்கள். இன்னும் சொல்லப்போனால் முதல் தலைமுறையாக கூட இருப்பார்கள். அவர்கள் ஏதாவது நெறிமுறை தெரியாமல் நடந்துகொண்டால், தெரிந்தோ, தெரியாமலோ ஏதாவது தவறு செய்துவிட்டால், தயவுசெய்து அவர்களை தண்டித்துவிடாதீர்கள், புறக்கணித்துவிடாதீர்கள். அவர்கள் எப்படி இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று நீங்கள் சொல்லிக் கொடுங்கள். நீங்க அவர்களை வழிநடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிச்சயம் அவர்கள் களத்தில் உங்களுக்கு பக்கபலமாக, உற்ற துணையாக இருப்பார்கள்.

### தேர்தல் பணிகள்

இன்றைக்கு நாம் மிக மிக முக்கியமான ஒரு கட்டத்தில் இருக்கிறோம். சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஆறு மாத காலம்தான் இருக்கிறது. எனவே, நான் ஏற்கனவே என்னுடைய மக்கள் சந்திப்புகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறேன். வந்திருக்கக்கூடிய இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய தேர்தல் பணிகளை இன்றிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

இன்னைக்கு நம் வலிமையைப் பார்த்து பல எதிர்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கிறார்கள். நம் வளர்ச்சி பல பேர் கண்களை உறுத்திக்கொண்டு இருக்கிறது. அதனாலதான் புதிதாக வருபவர்கள், ஏற்கனவே இருந்தவர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு தி.மு.கவை எதிர்க்கிறேன் என்று வரிந்து கட்டிக்கொண்டு, ஏதாவது ஒரு குற்றச்சாட்டை வாய்க்கு வந்ததை பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் நம்மை விமர்சிக்கிறது, அதுவும் இப்ப குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், ஒரு நான்கு ஐந்து நாட்களாக அவருக்கு நான் மட்டும்தான் தெரிகிறேன். தலைவரையே அவர் மறந்துவிட்டார். தலைவரை கடைசியாதான் நாங்கள் உள்ளே இறக்குவோம். வேலு அண்ணன் பேசும் போது சொன்னார் இன்னும் தலைவர் களத்துக்கே வரவில்லை. அப்பவே நாம் இவ்வளவு வலிமையாக போய்கொண்டு இருக்கிறோம். வேலு அண்ணன் பேசும்போது சொன்னார், அண்ணன் சுதர்சனம் அவர்கள் பேசும்போது சொன்னார். இளைஞர் அணி செயலாளருக்கு இப்படி பல்வேறு பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு எதிர்பார்ப்பு இருக்கு என்று எல்லா பாலையும் தூக்கி என் மேல் போட்டுவிட்டார்கள். எல்லாரும் களத்துக்கு வர வேண்டும். நீங்கள் உட்பட அத்தனை பேரும் இன்றைக்கு களத்தில் இருக்க வேண்டும். அதுதான் இளைஞர் அணிக்கு நீங்கள் செய்யக்கூடிய ஒரே பணி. அதுதான் நமக்கு வெற்றியை கொடுக்கும். அதுதான் மக்களின் நம்பிக்கையை, நம் தி.மு.க பக்கம் திருப்பும்.

### 200 தொகுதிகளுக்கு மேல்

தலைவர் அவர்கள் 200 தொகுதிகள் வெற்றிப் பெற வேண்டும் என்று இலக்கு கொடுத்திருக்கிறார்கள். நாம் களத்தில் இறங்கி சிறப்பாக செயல்பட்டோம் என்றால், 200 இல்லை 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிப் பெறுவதற்கான வாய்ப்புகள் நமக்கு இருக்கின்றன. அதற்கு ஒரு தொடக்கமாக மயிலாப்பூர், தியாகராய நகர், திருவொற்றியூர் இந்த மூன்று தொகுதியிலும் உதயசூரியன் உதித்துவிட்டான் என்ற செய்தி நமக்கு வர வேண்டும்.

வெற்றி மட்டுமே நம் இலக்காக இருக்க வேண்டும். அதை மனதில் வைத்துக்கொண்டு களப்பணியாற்ற வேண்டும். வந்திருக்கின்ற உங்கள் அனைவரின் பணிகளும் சிறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளர்கள் மாதவரம் எஸ். சுதர்சனம், மயிலை வேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், ஜெ.கருணாநிதி, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் மோகன், ரத்னா லோகேஸ்வரன், பகுதி கழகச் செயலாளர் ஏழுமலை, மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் தனியரசு, ஆறுமுகம், பகுதி கழகச் செயலாளர்கள் நந்தன மதி, முரளி, அருள்தாசன், சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உமா சங்கர், தினேஷ் மாணிக்கம், விக்னேஸ்வரன், அஸ்வின்குமார், டான்டி பிரகாஷ், வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சீனிவாசன், மோரை சதீஷ்குமார், கேபிள் கணேசன், இனியன், சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் மணிரத்தினம், மணிகண்டன், ஜெகதீஷ், திவான் குமார், சரவணன், அவிநாஷ், ஸ்டாலின், அன்பகம் செந்தில் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.